# பசுமைக் கதிர்

வெளியீடு

**வேதபுரி வேளாண்மை அறிவியல் மையம்**

கீழ்நெல்லி, திருவண்ணாமலை மாவட்டம்

பாகृअनुप ICAR

(ஜுலை – டிசம்பர் 2012)


## ஆசிரியர் குரல்

எங்களது வேதபுரி வேளாண்மை அறிவியல் மையத்தின் பசுமைக்கதிர் வாயிலாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பொன் விளையும் பூமியாம் நம் மண்ணில் ஏற்படும் பிரச்சனைகளை நிவர்த்தி செய்து இடுபொருட்கள் செலவை குறைக்கவும், மகசூலை அதிகரிக்கவும், களர் மற்றும் உவர் நிலச்சீர்திருத்த முறைகள் பற்றி இந்த இதழில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எனவே விவசாய பெருமக்கள் இத்தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மண் வளத்தை பெருக்கி உற்பத்தியை அதிகரித்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்

**ச. ரமேஷ்,** B.A., LLB.

சிறப்பு ஆசிரியர்

## மையத்தில் விற்பனைக்கு

- தென்னங்கன்றுகள்
- ஒட்டு கட்டிய பழச்செடிகள்
- அலங்காரச்செடிகள்
- மண்புழு உரம்
- பலகை மரக்கன்றுகள்
- தீவனப்புல் கரணை
- தலச்சேரி ஆடுகள்
- காளான் மற்றும் காளான் விதைகள்
- ஊறுகாய்
- ஊட்டச்சத்துமாவு
- நேரடி நெல்விதைப்புக் கருவி
- கரும்பு தோகை உரிக்கும் கருவி

## அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம்



வேதபுரி வேளாண்மை அறிவியல் மையத்தின் 15வது அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம் 5.7.12 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் மைய வளாகத்தில் நடைபெற்றது.

மையத்தின் மனையியல் தொழில் நுட்ப வல்லுநர் திருமதி. மார்க்ரெட் அவர்கள் கூட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்று பேசினார். தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனத் தலைவர் திரு. ச.ரமேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ந. ரமேஷ்ராஜா அவர்கள் மையத்தின் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையை சமர்ப்பித்தார். எட்டாவது மண்டல திட்ட இயக்குநர் (ICAR) முனைவர் திரு. எஸ்.பிரபுகுமார் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் தேவையறிந்து தொழில் நுட்பங்களையும், செயல் விளக்கங்களையும் விஞ்ஞானிகள் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும் என்று கூறினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் திரு. கதிரேசன் அவர்கள் முன்னிலை வகித்து கருத்துரை வழங்கினார்.

திரூர்குப்பம் வேளாண்மை அறிவியல் மையத்தின் பேராசிரியர் முனைவர் திரு. தேவநாதன், வேளாண்மை இணை இயக்குநர் திரு. வீரமணி, நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் திரு. சுதர்சன், தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வயல்வெளிப் பள்ளி

ஆரணி வட்டம் மோட்டூர் கிராமத்தில் கார்த்திகை (நவரை) பட்டத்தில் உழவர்களுக்கான வயல் வெளிப்பள்ளி மணிலாவில் நடத்தப்பட்டது. இதில் 25 விவசாயிகளுக்கு பிரதி வாரம் வியாழக்கிழமையன்று கடந்த நவம்பர் மாதத்திலிருந்து வகுப்புகள் நடத்தப்பட்டன.



இதில் ஒவ்வொரு வாரமும் மண் பரிசோதனை முக்கியத்துவம், நுண்ணுயிர் உரங்களின் பயன்பாடு, ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம், இயந்திரம் மூலம் மணிலா பிரித்தெடுத்தல் மற்றும் அறுவடைக்கு பின் நேர்த்தி போன்ற தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. மேலும் இதுசார்ந்த செயல் விளக்கங்களும் விவசாயிகள் நிலத்தில் செய்து காண்பிக்கப்பட்டது.

## குழுக்கூட்டம்



சாமந்திபுரம் மற்றும் பரியம்பாடி கிராமங்களில் 26.7.2012 மற்றும் 01.10.2012 தேதிகளில் விவசாய குழுக்கூட்டங்கள் மையம் மூலம் நடத்தப் பட்டது.இதில் மொத்தம் 56 விவசாயிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக்கூட்டத்தில் விவசாயிகளுக்கு விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்களில் ஏற்படும் பிரச்சனைகள் பற்றியும் அதற்கான தீர்வுகள் குறித்தும் ஆலோசனைகள் செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டது.

## பார்த்தீனியம் ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்



வேதபுரி வேளாண்மை அறிவியல் மையம் மூலம் அக்ராபாளையம் கிராமத்தில் 22.08.12 அன்று பார்த்தீனியம் களைச்செடி ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ரமேஷ்ராஜா பார்த்தீனியத்தால் ஏற்படும் தீமைகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி எடுத்துரைத்தார். அனைத்து தொழில் நுட்ப வல்லுநர்களும் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களை வழங்கினார்கள். மேலும் ஆதிபராசக்தி விவசாயக் கல்லூரி மாணவிகள் உள்ளிட்ட 381 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## நபார்டு வங்கியின் கிராம மேம்பாட்டுத் திட்டம்

நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் வேளாண்மை அறிவியல் மையம் சார்பாக கிராம மேம்பாட்டுத் திட்டம் மேற்கு ஆரணி வட்டாரம் காட்டுக்காநல்லூர் கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராம மேம்பாட்டுக் குழு கூட்டம் 30.08.12 அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மண்புழு உர உற்பத்திக்கூடங்களை அமைத்தல், நேரடி நெல்விதைப்பு கருவி செயல்விளக்கம், சுற்றுச்சூழல் காக்க மரக்கன்று



நடுதல், பள்ளிகளுக்கு தேவையான பொருட்களை வழங்குதல், கால்நடை விழிப்புணர்வு முகாம் நடத்துதல் போன்ற முக்கிய தொழில்நுட்ப திட்டங்களை செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டன. மேலும் பல்வேறு மண்ஆய்வு முகாம்கள் மற்றும் தொழில் நுட்ப உதவிகள் வேளாண்மை அறிவியல் மையத்தின் சார்பாக அளிக்கப்பட்டது.

## மஞ்சள் வேகவைக்கும் கலன்-செயல்விளக்கம்

ராமச்சந்திராபுரம் கிராமத்தில் 23.07.2012 அன்று வேதபுரி வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் மஞ்சள் வேகவைக்கும் கலன் பற்றிய செயல்விளக்கம் முதன்மை நிருபணத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது. இதில் 19 விவசாயிகள் கலந்து கொண்டு மஞ்சள் வேகவைக்கும் கலன் பற்றிய பயன்களை தெரிந்து கொண்டு பயனடைந்தனர்.

## விவசாயிகள் சந்திப்பு



சேத்துப்பட்டு வட்டாரம் இடையன்குளத்தூர் கிராமத்தில் 28.07.12 அன்று நெல்பயிரில் சமச்சீர் உரப்பயன்பாடு பற்றிய செயல்விளக்கத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் சந்திப்பு இந்திய உரச்சங்கம், சென்னை மற்றும் வேளாண்மை அறிவியல் மையம் மூலம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பல்லவன் வங்கி கிளை மேலாளர் திரு. அரசு அவர்கள் கலந்து கொண்டு வேளாண் சார் வங்கி திட்டங்கள் பற்றி சிறப்புரையாற்றினார். வேளாண்மை உதவி அலுவலர் திரு. ஏழுமலை வேளாண்மைத்துறை திட்டங்களை பற்றி விளக்கினார். மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ரமேஷ்ராஜா அவர்கள் சமச்சீர் உர மேலாண்மையின் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மையத்தின் மற்ற துறை விஞ்ஞானிகள் அனைவரும் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களை விளக்கினார்கள். இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயி திரு. ரவி அவர்கள் சமச்சீர் உர மேலாண்மையின் பயன்கள் பற்றிய அனுபவங்களை மற்ற விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டார். இதில் மொத்தம் 105 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம்

காட்டுக்காநல்லூர் கிராமத்தில் 28.08.12 அன்று மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம் இந்திய உரச்சங்கம், சென்னையுடன் இணைந்து நடத்தப்பட்டது. மண்மாதிரி எடுத்தல் பற்றிய செயல் விளக்கம் செய்ததோடு 30 விவசாயிகள் நிலத்தில் மண்மாதிரி எடுக்கப்பட்டது.



மேலும் வண்ணான்குளம் மற்றும் விளாங்குப்பம் கிராமங்களில் நடத்தப்பட்டது. இதில் மண்மாதிரி எடுத்தல் மண்பரிசோதனையின் பயன்கள் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப் பட்டது. சுமார் 200 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கருத்தரங்கம்

வேதபுரி வேளாண்மை அறிவியல் மையமும் சமுதாய மற்றும் கல்வி வளர்ச்சிக்கான சங்கமும் இணைந்து வந்தவாசி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 28.11.2012 புதன்கிழமையன்று சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கருத்தரங்கத்தினை நடத்தினர்.

தலைமை ஆசிரியர் திரு. பி. சம்பத் தலைமை வகித்தார். சென்னை மாநில கருவூல மையத்தை சேர்ந்த திரு. ஆர் ராஜன், திட்ட உதவியாளர் திரு. ச.முருகேசன், ஓம்சக்தி கல்வி நிறுவனத் தலைவர் திரு. ஆர் சீனிவாசன் ஆகியோர் கலந்துகொண்டு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு உரையாற்றினர். கருத்தரங்கை முன்னிட்டு பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

## வயல்விழா - மணிலா

மணிலாவில் கடந்த ஜுன் 2012 மானாவாரி பருவத்தில் ஆரணி, போளுர் மற்றும் சேத்பட் வட்டாரங்களில் நமது மையம் மூலம் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு திண்டிவனம் எண்ணெய்வித்து ஆராய்ச்சி மையம் மூலம் மணிலா விதைகள் இரண்டு ரகங்கள் (TMV 13 & ICGV – 00351) தலா 5 கிலோ வீதம் செயல் விளக்கத்திற்காக இலவசமாக வழங்கப்பட்டு வயல் விழாவும் நடத்தப்பட்டது.

## வயல்விழா - கத்தரி வி.ஆர்.எம் (பிஆர்)–1

வேதபுரி வேளாண்மை அறிவியல் மையம் மூலம் முதல் நிலை செயல்விளக்கத் திட்டத்தின் கீழ் வி.ஆர்.எம் (பிஆர்)–1 கத்தரி பற்றிய வயல்விழா 12.10.12 அன்று ஆரணி வட்டாரம் ஒண்டிக்குடிசை கிராமத்தில் நடத்தப்பட்டது. இதில் தொழில்நுட்ப வல்லுநர்கள் தோட்டக்கலை, உழவியல், மண்ணியல் மற்றும் கால்நடைத்துறை ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தனர். விவசாயி திரு. சிவலிங்கம் முள்ளுக்கத்தரி ரகத்தின் சிறப்பம்சங்களையும் சாகுபடி முறைகளையும் விளக்கிக் கூறினார். தோட்டக்கலை உதவி



அலுவலர்கள் திரு.ரமேஷ் மற்றும் திரு.வேடியப்பன் ஆகியோரும் கலந்து கொண்டு தொழில் நுட்ப விளக்கம் அளித்தனர். இதில் 33 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## வயல்விழா - தக்காளி கோ.டிஎச்-3

வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் முதல்நிலை செயல்விளக்க திட்டத்தின் கீழ் தக்காளி கோ.டிஎச்-3 பற்றிய வயல்விழா ஆரணி வட்டாரம் வண்ணாங்குளத்தில் 31.12.12 அன்று நடத்தப்பட்டது. இதில் மைய தொழில் நுட்ப வல்லுநர்கள் தோட்டக்கலை, மண்ணியில் மற்றும் ஆய்வக உதவியாளர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களை எடுத்துக்கூறினர். மேலும் தோட்டக்கலை அலுவலர்கள் கலந்து கொண்டு தோட்டக்கலைத் துறை திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். விவசாயி திரு. சிவராமன் அவர்கள் இந்த தக்காளி இரகத்தின் சாகுபடி அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இதில் மொத்தம் 27 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## உலக உணவு தினம்



வேளாண்மை அறிவியல் மையம், நபார்டு வங்கி, திருவண்ணாமலை மற்றும் அன்னை தெரசா தொண்டு நிறுவனம், கீழ்நகர் இணைந்து உலக உணவு தின விழாவினை, ஆரணி வட்டாரம் கீழ்நகர் கிராமத்தில் 16.10.12 அன்று நடத்தின. உலகிற்கு உணவு அளிப்பதில் வேளாண் கூட்டுறவு சங்கத்தின் முக்கியத்துவம் என்ற கருத்தை வலியுறுத்தி இவ்விழா நடத்தப்பட்டது.

இவ்விழாவில் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ந.ரமேஷ்ராஜா, நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் திரு.எஸ்.டி.சுதர்சன், பாரத ஸ்டேட் வங்கியின் அலுவலக நிர்வாகி திரு.வி.ராஜதுரை உதவி வேளாண்மை இயக்குநர் திரு.இ.செந்தில் குமார் மற்றும் பல தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நிர்வாகிகள், அன்னை தெரசா தொண்டு நிறுவன செயலாளர் திரு. பலராமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மேலும் வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆய்வக உதவியாளர் ஆகியோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## விவசாயிகளுக்கான தொழில்நுட்பங்கள்

### நிலச் சீர்திருத்த முறைகள்

மண் ஒரு இயற்கை வளம், பயிர் விளைச்சலுக்கு வளமான மண் மிகவும் அவசியம். பயிருக்குத் தேவையான எல்லா ஊட்டச்சத்துக்களும் மண்ணிலிருந்து கிடைப்பதால் பயிர்கள் தேவையான சத்துக்களை கிரகித்துக் கொள்ளும் அளவில் மண்வளத்தை பாதுகாத்து பராமரிக்க வேண்டியது நம் கடமையாகிறது.

**களர் மண்**

அதிகமான சோடியம் அயனிகள் மண்ணின்

களித்துகள்களால் (clay particles) ஈர்க்கப்பட்டிருந்தால், மண்ணோடு நீர் சேரும் போது மண் கட்டிகள் சிறு துகள்களாக உடைந்து பின் களித்துகள்கள் தனித்தனியாகப் பிரிந்துவிடுகின்றன.

இதனால் களர் மண் வயலில் மழை அல்லது நீர்ப்பாசனத்தின் போது மண்ணின் கட்டமைப்பு சிதைந்து, பிரிந்த களித்துகள்கள் மண்ணிலுள்ள துவாரங்களை அடைக்கின்றன. மண்ணின் நீர் கடத்தும் திறன் குறைந்து நீர்த்தேக்கம் உண்டாகிறது. பயிர்களின் வேர்சுவாசம் தடைபடுகிறது.

## உவர் மண்

பாறைகள் சிதைந்து மண்ணாகும் பொழுதோ அல்லது உப்புநீர்ப் பாசனத்தாலோ, மண்ணில் பல்வேறு உப்புக்கள் தேங்குகின்றன. நிலத்தின் அடித்தள நீரில் உப்பு அதிகமாக இருந்தால், மண்ணின் நுண்ணிய துவாரங்கள் வழியாக மேல்மட்டத்திற்கு நீர் உறிஞ்சப்படுகையில், மண்ணில் உப்பு அதிகரிக்கலாம். உப்பு மண்ணில் கால்சியம், மக்னீசியம், பொட்டாசியம் உப்புக்களைவிட சோடியம் குளோரைடு மிகுந்து காணப்படுகின்றது.

## அமில மண்

கரையும் உப்புக்களாகிய கால்சியம், மெக்னீசியம், சோடியம் போன்றவைகள் அதிக மழையின் காரணமாக நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதால் மண் அமிலத்தன்மை அடைகிறது.

## கார அமிலத்தன்மை

மண்ணின் கார அமிலத்தன்மையை பி.எச் அளவீட்டின் மூலம் அறியலாம். பி.எச் 6.5 க்கு கீழ் இருந்தால் அமில மண்ணென்றும், 8.5க்கு மேல் இருந்தால் கார மண் என்றும் அறியலாம். இதற்கிடைப்பட்ட அளவீடுகள் 6.5 – 8.0 வரை பயிர் வளர்ச்சிக்கு உகந்ததாகும். 6.5 – 7.5 நடுநிலையாகும்.

## களர் மண்களை நிவர்த்தி செய்யும் முறை

சோடியம் நிறைந்த களர் மண்களுக்கு ஜிப்சம் இடவேண்டும். (ஜிப்சத்தின் தேவையை மண் பரிசோதனை ஆய்வகத்திலிருந்து கண்டறிந்து அதன் தேவைக்கேற்றவாறு இட வேண்டும்). சுண்ணாம்பு இல்லாத நிலத்திற்கு ஏக்கருக்கு 500 கிலோ இட்டு வடிகால் வசதியைச் சீராக்க வேண்டும். வருடாவருடம் தக்கைப்பூண்டு, சணப்பை, கொழுஞ்சி போன்ற பசுந்தாள் உரங்களை பயிரிட்டு மடக்கி உழுதல் வேண்டும். இயற்கை உரங்களாகிய தொழுஉரம், கம்போஸ்ட் உரம், தென்னை நார்க்கழிவு, கரும்பாலைக் கழிவு போன்றவைகளை அதிக அளவில் உபயோகிக்க வேண்டும். களரை தாங்கி வளரக்கூடிய பயிர்கள் நெல் (திருச்சி 1,2,3, பி.ஒய்-1, கோ-43, பையூர்-1 இரகங்கள்) போன்றவற்றை பயிரிடலாம்.

## உவர் மண்களை நிவர்த்தி செய்யும் முறை

நிலத்தில் அதிக அளவில் உப்பு உள்ளதால் அதனை நீக்க நல்ல நீரைத் தேக்கி வடிப்பதனால் உவர் நிலத்தை சீர்படுத்த முடியும். சொட்டுநீர் பாசனம் சாலச் சிறந்தது. அதிக அளவு தழை, தொழுஉரம் இடுதல் வேண்டும். உவரைத் தாங்கி வளரக்கூடிய கேழ்வரகு, பருத்தி, மிளகாய், தக்காளி, சூரியகாந்தி, குதிரைமசால், போன்றவைகளை பயிரிட்டால் நல்ல பலன் உண்டு.

## அமில மண்களை நிவர்த்தி செய்யும் முறை

மண் ஆய்வுப்படி பரிந்துரைக்கப்பட்ட சுண்ணாம்பை பயிர் செய்வதற்கு 20 நாட்களுக்கு முன் நிலத்தில் இட்டு நன்கு உழுது நீர்ப்பாய்ச்ச வேண்டும். அமிலத் தன்மையை தாங்கி வளரக்கூடிய பயறு வகைகளில் தட்டைப்பயிறு, சோயாமொச்சை மற்றும் மலைப் பயிர்கள் நன்றாக வளரும்.

- **மண் மாதிரி ஆய்வுக் கட்டணம்: ரூ.50/-**


சிறப்பு ஆசிரியர்

திரு. ச. ரமேஷ்
தலைவர், தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம்.

ஆசிரியர்

திரு. ந. ரமேஷ் ராஜா
தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)

ஆசிரியர் குழு

திருமதி. த. மார்க்ரெட்
தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்)

திரு. ப. சுதர்சன்
தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)

திரு. வெ. பெ. கார்த்திகேயன்
தொழில் நுட்ப வல்லுநர் (மண்ணியல்)

திரு. ச. முருகேசன்
ஆய்வக உதவியாளர்

திரு. து. இளையகுமார்
பண்ணை மேலாளர்

நிர்வாகக் குழு

திருமதி. ம. விஜி
அலுவலக உதவியாளர்

திரு. ஓ. சேகர்
திட்ட உதவியாளர் (கணிப்பொறி)

திருமதி. அ. கி. கீதா
சுருக்கெழுத்தாளர்


பெறுநர்
திரு/திருமதி


அனுப்புநர்
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
வேளாண் அறிவியல் மையம்
கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல்
செய்யார் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்-604 410
தொலை பேசி : 04182 – 293484, 201525
மின்அஞ்சல் : kvktvmalai91@gmail.com
வலைதளம் : kvktiruvannamalai.com